**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII /XXV Code of Criminal Procedure / BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.1274/2025 | Date | : 20.05.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.2 | Taluk | : |
| Name | : **முகமது தவ்பிக்** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.05.2026

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.)

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னிமலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.02.2025ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு சட்டவிரோத மது விற்பனை லாட்டரிசீட்டு விற்பனை மற்றும் இதர குற்றங்களை கண்காணிக்கும் பொருட்டு தலைமை காவலர் காதர் மைதீன் மற்றும் தலைமைகாவலர் அருண்குமார் ஆகியோருடன் நான் எனது காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் ஈரோடு கொல்லம்பாளையம், ஒயின்ஷாப் அருகில் உள்ள காலியிடத்தை கண்காணித்தபோது ஒரு வெள்ளைநிற சாக்கில் ஏதோ வைத்துக்கொண்டு சந்தேகத்திற்கிடமாக ஒருவர் நின்றுகொண்டிருந்தார்.

2. பின்னர் அவர் எங்களை பார்த்தவுடம் தப்பி ஓட முயற்சித்தவரை நாங்கள் சுற்றிவளைத்து பிடித்து விசாரிக்க, முதலில் முன்னுக்குப்பின் முரணாக பெயர் விலாசத்தை கூறியவர் இறுதியாக அவர் தனது பெயர் காளிதாஸ் என்றும் தற்போது ஈரோடு கொல்லம்பாளையம், ஒயின்ஷாப் அருகில் குடியிருப்பதாகவும் சொன்னார்.

அவர் கையில் வைத்திருந்த வெள்ளைநிற சாக்குப்பையில் அரசு மதுபானங்களான சுமார் 180ML அளவுள்ள IMFL BLACK PEARL BRANDY – 11பாட்டில்கள் இருந்தது.

3. பின்பு அவரை நான்விசாரித்த போது, தனது சுயலாபம் கருதி டாஸ்மார்க் கடையில் இருந்து மதுபாட்டில்களை வாங்கி வந்து அதை அதிக விலை வைத்து விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி காலை 07.15 மணிக்கு கைது செய்தேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர்தான் காளிதாஸ் ஆவார்.

4. பின்பு காலை 07.30 மணிக்கு எதிரி காளிதாஸ் ஆஜர் செய்த சுமார் 180ML அளவுள்ள IMFL BLACK PEARL BRANDY – 11 பாட்டில்களை அந்த இடத்தில் பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் தலைமை காவலர் காதர்மைதீன் மற்றும் தலைமை காவலர் அருண்குமார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு ஆஜர் எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் காலை 08.00 மணிக்கு ஈரோடு தெற்கு காவல்நிலையம் சென்று குற்ற எண். 50/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP ACT 2024 ன் படி வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**5.** சாட்சிகள் தலைமை காவலர்களான பிரதீப் குமார் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கைப்பற்றிய வழக்கு சொத்தினை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(படிவம் 91 அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு எனது புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP ACT 2024 ன் படி குற்ற அறிக்கை தாக்கல்செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடமானது பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் விசாரணை செய்தேன் ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. எதிரி மதுபானம் விற்பனை செய்ததாக கூறியுள்ள நிலையில்

விற்பனை செய்த தொகையை கைப்பற்றினேனா என்றால் இல்லை. மதுபானங்கள் வைத்திருந்ததாக சொல்லப்படும் வெள்ளை நிற சாக்கு பையை கைப்பற்றினாரா என்றால் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. எதிரி மதுபானம் விற்பனை செய்ததாக கூறியுள்ள நிலையில் அவ்வாறு மதுபானம் விற்பனை செய்ததை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி மதுபானங்களை எதிரி யாரிடம் இருந்து வாங்கினார் யாரிடம் விற்பனை செய்தார் என்பது குறித்து விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அரசு மதுபான கடையில் வாங்கி வைத்திருந்ததாக தெரிந்து கொண்டேன். எதிரியை கைது செய்த சமயத்தில் வீடியோ பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை.

3. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும், எதிரியை கைது செய்யவில்லை என்றும், நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்காக புள்ளிவிவரக் கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.05.20 17:08:59 -0800

Judicial Magistrate No.III,

Erode.